# நடுத்தர வயது.

பள்ளி நாட்கள்
பல் போகும் நாட்கள்
இடையில்
பணத்தைத் தேடி
பதவியைத் தேடி
பறக்கும் நாட்கள்;

கைக் காணும் நாட்கள்
கரம் நடுங்கும் நாட்கள்
இடையில்
உழைப்பு, சலிப்பு
மீண்டும் உழைப்பு என
விரைந்து மறையும்
'ராக்கெட்' வேக நாட்கள்;

காதல் கொள்ளும் நாட்கள்
மறதியில் மயங்கும் நாட்கள்
இடையில்
செக்கு மாடு போல்
சுற்றி வரும்
நடைமுறை வேகத் தடைகளில்
சிக்கித் திணறும்
ஆமை வேக நாட்கள்;

ஊஞ்சலாடும் நாட்கள்
ஊன்றுகோல் நாட்கள்
இடையில்
அடுத்த தலைமுறையைத்
தயார் படுத்தும்
திரிசங்கு நாட்கள்...

அ. சொ
பெங்களூர்
ஆகஸ்ட் 2009.